# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2020 யூலை

## (204) வியாபார முகாமைத்துவம்

இவ்வினாத்தாள் 3 பகுதிகளைக் கொண்டது. – **A, B, C** ஆகிய இப்பகுதிகள் 07 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளன.

### பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01**

வினா 1 ஆனது பதினைந்து (15) OTQs ஐக் கொண்டுள்ளது. முதலாவது வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 25.

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர்.

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களைப் பொறுத்தவரையில், அங்கு அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட சொல் / சொற்களில் இருந்து சரியான விடையைத் தெரிவு செய்யுமாறும் அவ்வாறு தெரிவுசெய்த விடையை உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் எழுதுமாறும் கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றி விடை எழுதியிருந்தனர் ஆயினும் அதிகளவான விடைகள் தவறானதாகக் காணப்பட்டன.

இனங்காணப்பட்ட பொதுவான தவறுகள் பின்வருமாறு:

**வினா இல. 1.6**

பரீட்சார்த்திகள் விளைதிறன் மற்றும் வினைதிறனின் கருத்தினை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். பீட்டர் டிரக்டர் இன் கூற்றிற்கிணங்க, வினைத்திறன் என்பது செயல்களைச் சரியாகச் செய்வது என்பதாகும். அத்துடன் விளைதிறன் என்பது சரியான செயல்களைச் செய்வது ஆகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான செயல்களைச் செய்வது என்பதைத் தெரிவு செய்ததால் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளை இழந்திருந்தனர்.

**வினா இல. 1.7**

வெற்றிகரமான மாற்றம் ஒன்றின் அளவுரு பற்றிய அறிவு குறைவாகக் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. சிலர் வளங்களுக்குப் பதிலாக உறுதியின்மையை விடையாகத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.8**

மனித வள முகாமைத்துவத்தின் அடிப்படை ஆவணங்களான வேலைப் பகுப்பாய்வு மற்றும் வேலை வடிவமைப்பு பற்றி சிலர் தவறாக விளங்கிக் கொண்டிருந்தனர்.

**வினா இல. 1.9**

பெரும்பாலானவர்கள் சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.10**

சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள் பற்றிய அறிவு குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் விற்பனை செய்தல் என்பதற்குப் பதிலாக சந்தைப்படுத்தல் என்பதை விடையாளத் தெரிவு செய்திருந்தனர்.

உப வினாக்களின் இலக்கங்கள் **1.11** தொடக்கம் **1.15** வரை கேட்கப்பட்ட ஒவ்வொரு வினாவுக்கும் 02 விடைகளை நிரற்படுத்தும்படி / குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த 05 வினாக்களுக்கும் விடையளிக்கத் தவறியிருந்ததுடன் தேவையின்றி 10 புள்ளிகளை இழந்திருந்தனர். பரீட்சார்த்திகள் விளக்கமின்மை காரணமாக குறுகிய விடைகளை எழுதுவதில் பரிச்சயம் இல்லாதிருந்தனர்.

**வினா இல. 1.11**

பரீட்சகர் உற்பத்திக்கு முந்திய நடவடிக்கைகளை நிரல்படுத்தும்படி கோரியிருந்தார். சில பரீட்சார்த்திகளுக்கு உற்பத்திக்கு முந்திய நடவடிக்கைகளாக உட்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் தெரிந்திருக்கவில்லை.

**வினா இல. 1.12**

சில பரீட்சார்த்திகளுக்கு பயனுறுதிமிக்க சந்தைத் துண்டமாக்கலுக்கான தேவைகள் பற்றித் தெரியவில்லை. பரீட்சார்த்திகள் இலகுவான வழியாக MASDA என ஞாபகம் வைத்துக்கொள்ள முடியும்.

**வினா இல. 1.13**

சில பரீட்சார்த்திகள் வெளிவாரியான ஆட்சேர்ப்பின் அனுகூலங்களை எழுதியிருந்தனர். இது அவர்கள் வினாவைச் சரியாக வாசிக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

**வினா இல. 1.14**

பெரும்பாலானவர்கள் பொதுப்படையாக விடையளித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**வினா இல. 1.15**

இங்கு TQM பற்றிய அறிவு குறைவாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. சிலர் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாது தேவையற்ற விடயங்களை எழுதி நேரத்தை வீணடித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>பகுதி B</u>

இப்பகுதி ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மொத்தமாக 50 புள்ளிகளுக்காக 05 வினாக்களை உள்ளடக்கியிருந்தது. இந்த 5 வினாக்களுக்குமான பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டம் திருப்திகரமானதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் ஒரு சில வினாக்களுக்கு விடையெழுதாது தவிர்த்திருந்தனர்.

**வினா இல. 02**

இவ்வினா முகாமைச் செயன்முறையின் நான்கு தொழிற்பாடுகளை அடையாளங் காணுமாறு கேட்டிருந்ததுடன் கோவிட்-19 உலகளாவிய தொற்றுப் பரவல் காரணமாக இன்றைய வியாபாரச் சூழலில் முகாமையாளர்களால் எதிர்கொள்ளப்படுகின்ற மூன்று சவால்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பொதுவாக, அதிகளவான பரீட்சார்த்திகள் முகாமைச் செயன்முறையின் நான்கு தொழிற்பாடுகளையும் தற்போது முகாமையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் துல்லியமாகக் குறிப்பிட்டிருந்தனர். இது ஒரு இலகுவான வினாவாக இருந்ததால் அதற்கான குறிப்பிட்ட விடைகள் காணப்பட்டன. எனவே 10 புள்ளிகளை பெறுவது இலகுவானதாக இருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 03

இவ்வினா மனித வள முகாமைத்துவம் (HRM) தொடர்பான 3 பகுதிகளைக் கொண்டது. HRM இன் 04 தொழிற்பாடுகளை பெரும்பாலானவர்கள் சரியாக இனங்கண்டிருந்தனர். ஆயினும் வேலை விபரிப்பு (JD) மற்றும் வேலை குறித்துரைப்பு (JS) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விபரிப்பதில் அதிகளவானவர்கள் தவறியிருந்தனர். நிறுவனம் ஒன்றிற்கு HRM ஏன் முக்கியமானது என்பதற்கான 03 காரணங்களை விபரிப்பது தொடர்பில் சில பரீட்சார்த்திகளிடம் தெளிவான விளக்கம் காணப்படவில்லை. சிலர் ஒரே காரணத்தை மீண்டும் மீண்டும் பல தடவைகள் குறிப்பிட்டிருந்தனர். அவர்கள் தங்களுடைய பொது அறிவைக் கொண்டு வினாவுக்கு விடை அளித்திருந்தனர். பாடப் பரப்பு தொடர்பிலான அறிவு குறைவாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. விடைகள் சரியான விளக்கமின்றி வழங்கப்பட்டிருந்தன. மேலும், 3 காரணங்களை மாத்திரம் குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் தேவையற்ற விபரிப்புடன்கூடிய விடைகளைச் சில பரீட்சார்த்திகள் எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 04

முழு உலகமும் எதிர்நோக்குகின்ற தற்போதைய தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை டிஜிடல்மயப்படுத்துவதுடன் தொடர்புபட்டதாக இவ்வினா அமைந்திருந்தது. **பகுதி (a)** இல் டிஜிடல் சந்தைப்படுத்தலின் 04 நன்மைகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. இது தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு திருப்திகரமான மட்டத்தில் இருந்ததை பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது. **பகுதி (b)** ஆனது எந்தவொரு வியாபார நிறுவனத்திற்கும் சந்தைப்படுத்தல் என்பது ஏன் முக்கியமான ஒரு தொழிற்பாடாகக் கருதப்படுகிறது என்பதற்கான 03 காரணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இவ்வினாவுக்கு சம்பந்தமற்ற விடைகளை பல பரீட்சார்த்திகள் எழுதியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் தற்போதைய நிலைமையுடன் இணைந்ததாக விபரிப்புகளைச் செய்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சிறந்த மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 05

இவ்வினா, நிறுவனங்கள் தமது சொந்த எதிர்காலத்தை வடிவமைப்பதில் எதிர்வினையாற்றுவதை விடவும் அதிக செயல்திறனுடையதாக இருப்பதற்கு மூலோபாயம் வழிவகுக்கிறது என்பதை விபரிப்பதற்காக அமைக்கப்பட்ட வினாவாகும். இங்கு இரண்டு புள்ளிகளைப் பெறுவதற்கு நிறுவனமொன்றில் காணப்படக்கூடிய 2 வகை மூலோபாயங்களை இனங்காண்பது போதுமானதாக இருந்தது. நிறுவனமொன்றின் மூலோபாயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற வெளிவாரிக் காரணிகள் 03 இனை விபரிப்பதன் மூலம் இன்னுமொரு ஆறு புள்ளிகளைப் பரீட்சார்த்திகள் பெற முடியும். 10 புள்ளிகளையும் பெறுவதற்கு, மேலுள்ளவற்றுடன் சிறந்த மூலோபாயம் ஒன்றின் பண்புகள் இரண்டினையும் குறிப்பிடுதல் வேண்டும். வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பதைச் சரியாக விளங்கியிருந்த பரீட்சார்த்திகள் மாத்திரம் திருப்திகரமான விடைகளை எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஒரு சிலர் சரியான விடைகளை எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். **பகுதி (b)** இற்கு தேவையற்ற சம்பந்தமற்ற விபரங்களை எழுதியிருந்ததன் காரணமாக அதிகளவான பரீட்சார்த்திகள் குறைந்தளவான புள்ளிகளையே (சராசரி 6 புள்ளிகள்) பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 06

இவ்வினா 03 பகுதிகளைக் கொண்டுள்ளது. **பகுதி (a)** ஆனது சிறந்த நிறுவனக் கட்டமைப்பு ஒன்றின் 02 அனுகூலங்களையும் மோசமான முறையில் வடிவமைக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பின் 02 பிரதிகூலங்களையும் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. இதற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 04 ஆகும். **பகுதி (b)** ஆனது நிறுவனக் கட்டமைப்பொன்றை வடிவமைப்பதில் தாக்கம் செலுத்துகின்ற 02 காரணிகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இதற்கு இன்னுமொரு 04 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. **பகுதி (c)** இல் தொழிற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பொன்றின் அனுகூலங்கள் 02 இனைக் குறிப்பிடுவதற்குப் பரீட்சார்த்திகளிடம் எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு இன்னுமொரு 02 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. **பகுதி (b)** இற்காக பெரும்பாலான பரீட்சார்த்திகள் மிகவும் திருப்தியற்ற விடைகளை எழுதியிருந்ததன் காரணமாக 10 புள்ளிகளையும் பெற்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இந்த வினாவுக்கு விடையளிக்காது தவிர்த்திருந்தவர்களின் எண்ணிக்கையும்கூட மிக உயர்ந்த மட்டத்தில் இருந்தது. இவ்வினாவுக்கு விடையளித்தவர்களில் ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சகல மூன்று பகுதிகளுக்கும் திருப்திகரமாக விடை அளித்திருந்தனர். பாடப் புத்தகத்தை ஒழுங்காகப் படிக்காததும் வினா பற்றிய சரியான விளக்கமின்மையுமே இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

# பகுதி C

## வினா இல. 07

இது ஒரு விடய ஆய்வு வினாவாகும். தரப்பட்ட விவரணத்திற்கு எவ்வாறு கோட்பாட்டு ரீதியான காரணிகளைப் பிரயோகிக்கலாம் என்பதைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா அமைக்கப்பட்டிருந்தது. இவ்வினா 5 பகுதிகளைக் கொண்டது. அவையாவன **(a), (b), (c), (d)** மற்றும் **(e)**.

### பகுதி (a)

இங்கு பயனுறுதிவாய்ந்த தலைவர் ஒருவரின் 3 தொழிற்பாடுகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் திருப்திகரமான விடைகளை எழுதி இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட 06 புள்ளிகளையும் பெற முடிந்திருந்தது. சில பரீட்சார்த்திகள் பயனுறுதிவாய்ந்த தலைவர் ஒருவரின் தொழிற்பாடுகளின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும், அவற்றை விபரமாக விபரிப்பதற்குத் தவறியிருந்தனர். இதனால், அவர்களால் இதற்கென ஒதுக்கப்பட்டிருந்த முழுப் புள்ளிகளைப் பெற இயலவில்லை.

### பகுதி (b)

இப்பகுதி, இங்கு குறிப்பிடப்பட்ட **குளோவ் பெக்** கம்பனிக்கு கட்டுப்படுத்தலானது முக்கியமானதாகக் கருதப்படுவதற்கான 4 காரணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. 4 காரணங்களைக் கண்டறிந்து ஒவ்வொன்றாக விபரிக்கின்ற இந்த நோக்கத்திற்காக, தரப்பட்ட கம்பனியின் கட்டுப்படுத்தல் காரணி பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை எழுதியிருந்ததுடன் இதற்கு ஒதுக்கப்பட்ட 8 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தேவையற்ற விடயங்களை விரிவாக எழுதியிருந்தனர்.

### பகுதி (c)

இந்தப் பகுதி, நிறுவனத்தினுள் காணப்படும் தொடர்பாடல் தடைகளை வெற்றிகொள்வதற்கு **குளோவ் பெக்** கம்பனியின் முகாமையால் எடுக்கப்படக்கூடிய 4 நடவடிக்கைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கும்கூட சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தடைகளை வெற்றிகொள்வதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளைக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும், உரிய விடயத்துடன் அவற்றைத் தொடர்புபடுத்த வில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கிக் கொண்டிருந்ததால் இந்தப் பகுதிக்கான 4 புள்ளிகளையும் தவற விட்டிருந்தனர்.

**பகுதி (d)**

இந்தப் பகுதி, ஊழியர்கள் ஊக்கமின்றி இருப்பதைக் காட்டும் மூன்று அறிகுறிகளை இனங்காணுமாறு கேட்டிருந்தது. இந்தப் பகுதிக்கான விடைகள் மொத்தத்தில் மோசமாகக் காணப்பட்டன. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிப்பதைத் தவிர்த்திருந்தனர். பொதுவான ஊக்கமின்மை அறிகுறிகள் பற்றிய அறிவு போதாமல் இருந்தமையே இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். சில பரீட்சார்த்திகள் சரியான விடைகளைத் துல்லியமாக அளித்ததன் மூலம் சகல 3 புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (e)**

இந்த இறுதிப் பகுதியில், பரீட்சார்த்திகள் 4 புள்ளிகளைப் பெறுவதற்காக திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கு இடையிலான தொடர்பினை விபரிக்குமாறு கேட்கப்பட்டனர். இந்தப் பகுதிக்கான விடைகள் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் திருப்திகரமாக அளிக்கப்பட்டிருந்தன. ஆயினும் அந்தப் பரீட்சார்த்திகளால் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை.
**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

- - -

**பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்:**

**(1)** பாடத்திட்டத்தை / பாடப்புத்தகத்தை நன்றாகக் கற்கவும்.

**(2)** வினாத்தாளைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும் (இந்த நோக்கத்திற்காக மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

**(3)** பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் வாசித்து அதில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது தேவையற்ற விவரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்க்கவும்.

**(4)** விடைகள் ஒரே மொழியில் மாத்திரமே எழுதப்பட வேண்டும். அது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது குறிப்பிட்ட மொழியாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகள் ஒரு புதிய பக்கத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**(5)** பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

**(6)** விடைப்புத்தகத்தைக் கையளிப்பதற்கு முன்னர், சகல வினா இலக்கங்களும் உங்களுடைய சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டிருக்கிறதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

**(7)** ‘‘செயல் வினைச்சொல் நிரல்’’ வினாத்தாளின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணங்களின் அடிப்படையில் விடையளித்தல் வேண்டும்.

**(8)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**(9)** சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசிப்பது பயனுடையதாகும்.

**(10)** உங்களது அறிவை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையெழுதிப் பயிற்சி பெறுவது சிறந்தது.

**(11)** பரீட்சையில் சித்தியடையும் உறுதியான நோக்கத்துடனும் நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -